20th September 1958]

Sri K. ANBAZHAGAN : கோவில் நிலங்களில் பல வருட காலமாக, மதவேறுபாடு கருதாமல் பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு குடியிருக்க இடம் கொடுத்து வந்ததற்குமாறாக இப்பொழுது வேறு மதங்களைச் சார்ந்தவர்களான முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் ஆகியோர்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சி நடைபெறுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி அரசாங்கத்திடம் தகவல் இல்லை. ஆனால் இந்த விஷயங்களெல்லாம், இருக்கிற சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அதற்கு குறுக்கே நாம் ஒன்றும் செய்ய முடியாது.

Local Development Works

* 373 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount allotted for Gudiyattam taluk under Local Development Works Programme during 1957–58;

(*b*) the date of allotment of the amount;

(*c*) the amount spent up to 31st March 1958; and

(*d*) the amount remaining unspent?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Rs. 98,860.

(*b*) 12th September 1957.

(*c*) Rs. 71,346·54 nP.

(*d*) Rs. 27,513·46 nP.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார். இது போன்று ஒவ்வொரு ஆண்டிலும் நான்கு, ஐந்து மாதங்களுக்குப் பின்னால் பணத்தை ஒதுக்குகின்ற காரணத்தால் அதே ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் முடிக்கவேண்டும் என்று எண்ணி அவசர அவசரமாக இந்த அபிவிருத்தி வேலைகளை செய்வதால், இந்த வேலைகள் நல்ல முறையில் நடப்பதில்லை. அது மட்டுமல்ல, பணமும் மிச்சப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே வருட ஆரம்பத்திலேயே பணத்தை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று விதி இல்லை. ஒதுக்கின பணத்தைக் கொண்டு இந்த ஆண்டிலும் தொடர்ந்து வேலை நடத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

Price of Petrol

* 374 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the attention of the Union Government has been drawn by the Madras Government to the rise in the prices of petrol and petroleum products such as d· sel oil, tar, motor oil, etc.?

The Hon Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri A. A. RASHEED : Is it a fact that oil companies have reduced their prices for petrol and petroleum products and if so, will the Government recommend to the Union Government that the reduction be passed on to the consumers?

[20th September 1958

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The hon. Member should have been aware that this question has already been taken up in the Parliament and that there has been a discussion also on that. The Union Minister has also explained the position.

Private School Teachers

*375 *Q.*—**Sri N. K. PALANISAMI** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தனியார் பாடசாலைகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு உத்தியோக உத்தரவாதம் கொடுக்க அரசாங்கத்தார் எவையேனும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir, Adequate provision has been made in the rules relating to elementary schools and in the Madras Educational Rules to safeguard the interests of the teachers employed in Private schools.

Sri N. K. PALANISAMI : ஸார், தனிப்பட்ட பள்ளிக்கூடங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை நீக்குவதற்கும், நியமிப்பதற்கும் அதிகாரம் இந்த தனிப்பட்டவர்களுக்கே இருந்து வருகிறது. இதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால் இந்த பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்கள் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுக்கும்பொழுது அவர்களாகவே அதை நடத்திக்கொள்வதற்கு வேண்டிய சுதந்திரம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு அனுமதியும் கொடுத்துவிட்டு, இம்மாதிரிப்பட்ட அதிகாரங்களை சர்க்காரே வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் அது கஷ்டமாகவேத்தான் முடியும்.

Sri K. SATTANATHA KARAYALAR : May I know what are the safeguards?

The Hon. Sri C. SUBRAMANIAM : The terms under which they can be employed are formulated in the rules. A discharge from service can be made only before the completion of probation. If any discharge is made after the completion of probation, the concerned person can complain to the educational authorities and there is also an appeal provided for.

Sri M. S. SELVARAJAN : ஸார், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாச்சாரம் 1:35 என்ற முறையில் மாற்றி புதிய திட்டம் அமைத்திருப்பதால் இதனால் வேலை இழந்திருக்கக்கூடிய ஆசிரியர்களின் தொகை என்ன ? அவர்களுடைய கோரிக்கைகளை கவனிப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதன் காரணமாக வேலை இழப்பதற்கு இடம் கிடையாது. ஏனென்றால் இருக்கின்ற ஆசிரியர்களை நீக்குவதற்கு அதில் இடம் கொடுக்கவில்லை. இருக்கின்ற ஆசிரியர்களை மேலும் வைத்துத்தான் ஆகவேண்டும்.